# பெண்ணிய நோக்கில் சங்கதி

**கி.நவீன்குமார்**

*உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL4-Jan26-MD-149

Subject: Tamil

Received : 24.09.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.26.Jan149

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்த ஆய்வுக் கட்டுரை தலித் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் பாமாவின் சங்கதி நாவலை ஆராய்கிறது. பெண்ணியம் என்பது ஆண்–பெண் சமத்துவத்தை முன்வைக்கும் சிந்தனையாக இருந்தாலும், தலித் பெண்களின் வாழ்வியல் அனுபவங்கள் பொதுப் பெண்ணியத்திலிருந்து வேறுபட்டவை என்பதை சங்கதி நாவல் தெளிவாக எடுத்துரைக்கிறது. சாதி, பாலினம், பொருளாதார, வறுமை மற்றும் சமூக அதிகார அமைப்புகள் இணைந்து தலித் பெண்களை எவ்வாறு ஒடுக்குகின்றன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. பாலியல் வன்முறை, கட்டாயத் திருமணம், மனைவி மீதான வன்முறை, மன ஒடுக்குமுறை, உடை முறைகளில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் ஆபாச மொழி பயன்பாடு போன்ற வாழ்வியல் கூறுகள் பெண்ணியப் பார்வையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. தலித் பெண்களின் வலி, எதிர்ப்பு மற்றும் உயிர்ப்புடன் கூடிய குரலைப் பதிவு செய்வதன் மூலம் பாமா தலித் பெண்ணியத்திற்கு ஒரு தனித்த அடையாளத்தை உருவாக்குகிறார் என்பதே இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.*

**திறவுச் சொற்கள்: பெண்ணியம், தலித் பெண்ணியம், பாமா, சங்கதி, சாதி, ஒடுக்குமுறை, பாலின அடக்குமுறை, தலித் பெண்கள், பெண் வன்முறை, சமூக சமத்துவம்**

பெண்ணியம் என்பது இன்றைய காலக்கட்டத்தில் உலக முழுவதிலும் பேசப்படும் ஒரு பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. பெண்ணியம் என்பது ஆண், பெண் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்று பெண்களுக்கான உரிமையும் முன்னேற்றமும் சமுதாயச் சிக்கல்களாக இருக்கின்றன. பெண்ணியச் சார்ந்த சிந்தனைக் கருத்தினைக் கூறும் அறிஞர்கள் கல்வியின்மையே பெண்ணடிமைக்கு முதற்காரணம் என்று வரையறுத்துக் கூறுகின்றனர். பாலியல் அடக்குமுறையும் நமது மரபு சார்ந்த பண்பாடுகளும் பெண்களை அடிமைப் படுத்துகிறது. சமூக அமைப்பில், குடும்பம் என்ற அமைப்பில் ஆணாதிக்கச் செயல்பாடே இத்தகைய பெண்ணடிமைக்குக் காரணமாக அமைகிறது. இவ்வியலானது, பெண்ணியம் பற்றிப் பேசுவது மட்டுமில்லால் இவற்றை ஆராந்து பார்ப்பதே நோக்கமாகக் கொண்டுள்ளது.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**பெண்ணியம் - சொல் விளக்கம்**

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில், பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கும்;. இச்சொல், 'குநஅ¡நெ' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பெண் என்னும் சொல்லுக்கு, பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

பெண்ணியம் என்ற சொல், பெண் விடுதலை, பெண்ணடிமை, பெண்ணுரிமை, பெண்நிலை ஏற்பு, பெண்ணிலைவாதம் எனப் பல பொருள் தருவதாக அமைந்துள்ளது. பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தெற்காசிய நாடுகள், பெண்கள் சமூகத்திலும் அலுவலகங்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் இந்நிலையை மாற்றியமைக்க, ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, செயற்படும் முயற்சிகளும் என்ற விளக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

**பெண்ணிய வரையறை குறித்து அறிஞர்கள் கூற்று**

பெண்ணிய வரையரை குறித்துப் பல அறிஞர்கள் பலவிதமான கருத்துக்கள் மற்றும் கூற்றுக்களை முன் வைக்கின்றனர். அவர்களின் கூற்றினை பற்றிக் காண்போம்.

**சார்லட் பன்ச்**

"பெண்ணியம் என்பது, பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும்"1 என்கிறார் சார்லட் பன்ச்.

**முனைவர் இரா.பிரேமா**

"பெண்ணியம் என்ற இயக்கமானது, பெண்கள் தாமாக முடிவெடுத்து அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும்"2 என்று முனைவர் இரா.பிரேமா கூறுகிறார்.

**முனைவர் அரங்க மல்லிகா**

"தந்தை வழிச் சமூக ஆணாதிக்கம் ஏற்படுத்தி வைத்துள்ள பெண் மீதான பண்பாட்டுத் தொன்மங்களை உடைக்க, பெண்ணியவாதிகள் ஏற்படுத்திய கோட்பாடுகளைப் பெண்ணியம் என்று கூறுகின்றனர்"3 என்கிறார் முனைவர் அரங்க மல்லிகா.

**பெண்ணிய வகைகள்:**

- மார்க்சியப் பெண்ணியம்
- தலித் பெண்ணியம்

**மார்க்சியப் பெண்ணியம்**

மார்க்சியப் பெண்ணியம் என்பது பெண்ணியத்தின் ஓர் வகையாகத் திகழ்கிறது. இது பெண்ணியத்தில் மார்க்சியக் கோட்பாட்டை இணைத்து விரிவாக்குகிறது. மார்க்சியப் பெண்ணியம் முதலாளியத்துவத்தாலும் தனிச்சொத்துடைமையாலும் மகளிர் சுரண்டப்படுவதைப் பகுப்பாய்வு செய்கிறது .

முதலாளியத்துவத்தில் மகளிரின் உழைப்பின் பெரும்பகுதி ஈடுகட்டப்படுவதில்லை; எனவேஇ மார்க்சியப் பெண்ணியத்தின்படி மகளிரின் விடுதலை முதலாளிய அமைப்புகளை அழித்தொழிக்காமல் பெறவியலாது என்ற கொள்கையினைக் கொண்டுள்ளது.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**தலித் பெண்ணியம்**

தலித் பெண்ணியம் என்பது 'தலித்' மக்களிடையே சாதி மற்றும் பாலின பாத்திரங்களை கேள்வி கேட்பதை உள்ளடக்கிய ஒரு பெண்ணியச் செயற்பாடு ஆகும்.

**படைப்பில் சாதியும் பெண்களும்**

ஆண்களாலும் ஆதிக்க வர்க்கத்தினராலும் சாதி வெறியில் சிக்குண்ட பெண்கள், ஒதுக்கப்பட்டும் ஓரங்கட்டப்பட்டும் வரும் நிலை பற்றிய செய்திகள் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் விடுகின்றன. அப்படிப்பட்ட பெண்கள் குறித்த செய்திகளை பெண்ணியப் பார்வையில், ஒரு புதிய பரிணாமத்தை பெண்ணியப் படைப்பாளரான பாமா தன்னுடைய சங்கதி படைப்பில் வெளிப்படுத்துகிறார்.

மரியம்மாள் - மாணிக்கம் உறவினையொட்டி, ஊர்க்கூட்டம் நடக்கிறது. முதலாளி செய்த தவறை மறைக்க நாடகம் நடிக்கப்படுகிறது. பொய் வழக்குப் போட்டு இருவரையும் தண்டிக்கிறார்கள்.

"ஒருநாளு வெறகு பெறக்கிட்டு, வேனாப்பறந்த வெயில்ல வெறகுக் கெட்ட தூக்கிக்கிட்டு வந்துருக்கா மரியம்மா. கால்ல செருப்புகிருப்பு ஒன்னுமில்ல. ஓடக்காட்டு மணல்ல பொடிப் பொசுக்கிக் கெடக்கவும், அங்ன ஆலமரத்துல வெறகுக் கெட்ட ஊனிட்டு செத்தநேரம் எளப்பார ஒக்காந்துருக்கா. பக்கத்துல பம்புசெட்ல தண்ணி ஓடவும் போயி ரெண்டு வா தாகத்துக்குக் குடுச்சிட்டு வருவோம்னு போயிருக்கா. அது அந்தய்யா கொமாரசாமியோட பிஞ்சரூமுக்குள்ள அவரு இருந்துருக்காரு. இவா பாட்டுக்குப் போயி தண்ணிக் குடுச்சிட்டு வரயில, கையப்புடுச்சு ரூமுக்குள்ள இ;ழுத்துருக்காரு. இவா மெரண்டு போயி தப்புச்சோம் பொழைச்சோமுன்னு ஓடியாந்துருக்கா.

நம்ம பேரு வெளிப்பட்டுருமோன்னு நெனச்சு, கொமாரசாமி ஐயா ஊருக்குள்ள வந்து நாட்டாம கிட்ட பொகாரு குடுத்துட்டுப் போயிட்டாரு. ' நாங்க இன்னைக்கு ரவைக்கே ஊர்க்கூட்டம் போட்டு வெசாரிக்கோம் ஐயா' சொன்ன நாட்டாம, சொன்னது கெணக்கா தண்டரா போட்டு ராத்திரி ஊர்க்கூட்டத்தக் கூட்டிட்டாரு" ஊர்க்கூட்டத்தில் மரியம்மாளின் பேச்சினை ஆண்கள் யாரும் கண்டுகொள்ளாத ஒரு நிலை அங்கு நிலவியது.

"நானு அப்பிடியெல்லாஞ் செய்யலய்யா, மொதலாளிதான் எடயில எங்கிட்ட தப்பா நடக்க மொயற்சி பன்னாரு. நானு தப்பிச்சு ஓடியாந்துட்டேன்" சொல்லிட்டு சத்தமா அழுதா. ஒடனே கூட்டத்துல இருந்த ஆம்பளைங்க செலபேரு, "பாத்தியா, கண்டாரத்த கொள்ளு மகா தாந் தப்பிக்கனும்னு படார்னு மொதலாளி மேல தூக்கிப் போடுறத." இந்தப் புள்ளையப் போட்டு இந்தப்பாடு படுத்துரான்களே. அந்தப்பய்யன் மாணிக்கத்த அடிக்கானுகளான்னு பாரு. சரி அந்த மொதலாளி எதுவும் தப்புத் தண்டரா செஞ்சாரான்னு கேப்பமுன்னு ஒரு பெயலுக்கும் புத்தி வர மாட்டேங்கே சொல்லி முடிக்க முன்னாலயே பக்கத்துல நின்ன சின்னத்தாயி நல்லா இருக்கு ஓங்கத. மேச்சாதிக்காரங்கிட்ட இவனுக போயி கேக்க அவந்துட்டுக்காரன் பறப்பெயலுகளுக்கு

இம்புட்டுத் திமுரான்னு அவனுக சண்டைக்கு வர, நம்மளால தாக்குப் புடிக்க முடியுமா? அவனே தப்புச் செஞ்சிருந்தாலும் கமுக்கமா வச்சுட்டு இவுகளுக்கு அம்பதோ நூறோ தெண்டத்தப் போட்டு முடிக்கறத உட்டுட்டு நீ ஊருக்குள்ள கலகத்த உண்டாக்குவ பொருக்கோ, முன்னால அப்பிடித்தான் சுடுகாட்டுச் சண்டையில

மேச்சாதிக்காரனுக போலீசுகாரனுகள உட்டு நம்மள அடுச்சு நொறுக்குனது நெனப்புல இருக்காஇ சொல்லி முடிக்கவும், "அதுவுஞ் சரித்தான். நாலையும் யோசிச்சுத்தான் செய்யனும். நம்ப ஆம்பளைக அதெல்லாம் தெரியாமலா செய்வாக, சீனியம்மா சொல்லி முடுச்சா" என்று பாமா பதிவு செய்துள்ளார். (சங்கதி.ப.28,29,32)

இந்நிகழ்வில், மாணிக்கத்தைவிடப் பெண் என்ற முறையில் மரியம்மாளுக்கு அதிக தண்டனை கிடைக்கிறது. இத்தகைய பெண்ணிய நாவலில், மரியம்மாளுக்காகப் பாமா குரல் கொடுப்பதைக் காண முடிகிறது.

பெண்கள் என்றாலே தவறுபவர்கள், தவறிழைப்பவர்கள் என்ற மனப்போக்கானது காலங்காலமாய்ச் சமூகத்தில் நிலவி வருவதை மேற்கூறப்பட்ட நிகழ்வானது உறுதிப்படுத்துகிறது. ஆனால் அது முற்றிலும் தவறானது என்பதும், அதனை விளக்க முற்படும் மரியம்மாளுக்குப் பேச்சுச் சுதந்திரம்கூட வழங்கப்படாத ஆணாதிக்கம் மற்றும் சாதி இழிநிலையையுமே இங்கு முன்நிற்பதைக் காணமுடிகிறது.

**கட்டாயத் திருமணம்**

தமிழ்ச் சமூகத்தில், திருமணம் பற்றிய முடிவானது, மணம் புரிந்து கொள்ளும் ஆணும் பெண்ணும் எடுப்பதில்லை. மாறாக, அந்த முடிவானது, பெற்றோர்களாலும் உறவினர்களாலுமே எடுக்கப்படுகிறது. அதுவும் மணம் புரிந்து கொள்ளும் பெண்ணின் சம்மதத்தைப் பெறுவது தேவையற்றது என்ற எண்ணமே பெரும்பான்மையான குடும்பங்களில் நிலவி வருகிறது. கட்டாயத் திருமணங்கள் பெற்றோர்களின் சுயநலத்திற்காக நடத்தப்படுகின்றன. இப்படிப்பட்ட திருமணங்களினால், பெண்கள் விரைவில் இறக்கும் சூழ்நிலையும் உருவாகிறது. இது மட்டுமின்றி, தாங்கள் பெற்ற குழந்தைகளை அனாதைகளாக்கி விட்டுச் செல்லும் நிலையும் உருவாகிறது. இந்நிகழ்வுகளைப் பாமா தன் குடும்ப வாழ்வியல் நிகழ்வு மூலம் உதாரணங்கள் தந்து வெளிப்படுத்துகிறார். பாமா தன் பாட்டியிடம் பெரியம்மாவின் இறப்பு குறித்து விசாரிக்கும்போது, பாட்டி பின்வருமாறு கூறுகிறார்.

> **"கிளிய வளத்து பூன கைல குடுத்துட்டேன். ஒங்க பெரியப்பன் அவள அடுச்சே கொன்னு போட்டான். பெத்த வகுறு எரியுது. அநியாயமா அவளச் சாகடுச்சான் பாவி".**

"சின்னப்பிள்ளத்தனமா நீ பேசுற ஆம்பள அடிக்கும்போது பொம்பள போயி வெலக்க முடியுமா? அவா என்ன நாலஞ்சு அண்ணந்தம்பி கூடயா பெறந்துருக்கா? எதுத்துக்கேக்க நாதியில்ல. பெத்தத் தகப்பனும் இல்ல. எவெ என்னன்னு கேப்பான்? அப்பிடியே அங்ன நின்னவுக வெலக வந்தாலும், ஏம் பொண்டாட்டி, நா அடிப்பேன் கொல்லுவன்னு ஆணவமாப் பேசி அம்புட்டுப் பேரையும் வைரான். யாரு போவா சொல்லு". "அவா சாகும்போது கடைசிப் பிள்ளைக்கு, அதான் செயக்கொடியாளுக்கு நாலே மாசந்தான். பால்குடி மறக்காத பச்சமண்ண உட்டுட்டுப் போயிட்டா". (சங்கதி.ப.20)

கட்டாயத் திருமணங்கள் பெண்களின் விருப்பத்திற்கு மாறாக நடைபெறும் இடங்களில், பெண்கள் வலிந்து பாலியல் உறவுக்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அந்த வகையில் கணவன் மனைவியாக இருந்தாலும், மனைவியின் விருப்பத்திற்கு மாறாக, அவளைப்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

பாலியல் உறவுக்கு கணவன் அழைப்பது என்பது பாலியல் வன்முறையாகவே இங்கு அமைந்துள்ளது. தன்னுடைய விருப்பத்திற்கு மனைவி உடன்படவில்லை என்பதற்காக, அவளை அடித்தே கொன்ற கணவனின் ஆணாதிக்க வெறித்தனமான செயல்பாடு இங்கு பாமாவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**வரதட்சணை**

'திருமணம்' என்ற நிலையில், வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் நிலை, தலித் பெண்களுக்கு இல்லை. இச்சமூகக் கொடுமையிலிருந்து, அவர்கள் தப்பித்து வாழ்வதாக பாமா தெரிவிக்கிறார்.

"அம்மாக்கமாருக வெளிப்பார்வைக்குத்தான் இப்பிடி இருக்காக. அவுகாளுகள்ள கொமரி குட்டச்சிகளக் கர ஏத்துரதுன்னா லேசுப்பட்டக் காரியமில்ல. கழுத்து நிமுர நக போடனும். கைல ரொக்கங் குடுக்கனும். காடுகரைகள எழுதி வைக்கனும். இம்புட்டுஞ் செஞ்சு கெட்டிக் குடுத்தாலும் போற லெக்குகள்ள சந்தோசமாவா இருக்காகன்னா நெனச்சீக. அது பத்தாது இது பத்தாதுன்னு கொற வெட்டி கொடுமப்படுத்துவாக. மாப்பிள்ளைக கெடைக்குரதுக் குதுரக் கொம்புதான்". மேரி சொல்லி முடிக்கவும் நாகம்மாக் கெழவி சொன்னா, நீ சொல்றதும் நெசந்தாம்தா. நம்ம தெருவுகள்ள அப்பிடி இல்ல. என்னமோ நம்மளால ஏண்டது காதுல, மூக்குல, கம்மலு மூக்குத் தட்டக் குத்தி உட்டு பத்தி உட்ரலாம். கலியாணச் செலவு பூராம் மாப்பிள்ள வீட்டாளுக பாத்துக்குரும். நம்ம ரொக்கங் குடுக்க வேண்டாம். மாப்பிள்ள வந்து பருசம்னு போட்டு நம்மளுக்கு ரொக்கங்குடுத்துக் கெட்டிட்டுப் போகனும்" என்று தலித் மக்களிடையில் வரதட்சணை கொடுக்கும் பழக்கம் இல்லாத ஒரு நிலையினை இங்கு, பாமா எடுத்துரைக்கிறார். (சங்கதி.ப.117)

சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும் வரதட்சணை என்ற பேய், தலித் இனத்தை மட்டும் விட்டு வைத்திருப்பது வியப்பிற்குரியதாக இருக்கலாம். காரணம் தலித் மக்களின் பொருளாதார வசதியின்மைதான் வரதட்சணைப் பேயை நுழைய விடாது தடுக்கும் அரணாக இருக்கிறது. ஆனால் தற்போது படித்த தலித் மக்களிடையில் வரதட்சணை வாங்கும் பழக்கமும், கொடுக்கும் பழக்கமும் நடைமுறையில் இருப்பதை மறுப்பதற்கில்லை.

**மன ஒடுக்குமுறை**

ஆண் சமூகக் கட்டுகளிலிருந்து, பெண் தன்னை விடுவித்துக்கொள்ள எடுக்கும் எந்த முயற்சியும் அவள் பாலியலை, நடத்தையைச் சந்தேகிக்கும் முயற்சியாகவே இருக்கிறது. எனவே, பெண் உடலைச் சமூகப் பொருளாக்கி இழி நிலைப்படுத்தும் போது, உடல், உள்ளம் இரண்டும் பாதிப்படைகிறது.

"பொம்பளைகளோட நெலம ரொம்ப பரிதாபமாகவும் கேவலமாகவுந்தான் இருக்குது. காடுகரைகள்ள மேச்சாதிக்காரனுகட்ட இருந்து தப்பிக்கணும். கோயிலு காரியங்கள்ள இந்தச் சாமியாங்காரநக்கிக்கிட்டு, கடவுளு, மோட்சம், நரகமுன்னு அவெம்பயங்காட்டுரதுனால, அவனுக்கு அடிமைகளாகி கெடக்கணும். வீட்ல வந்தாலும் கஞ்சியக் காச்சுனமா குடுச்சமா படுத்தமான்னு இல்லாம புருசங்காரனுட்ட இம்சப்படனும்" என்று தலித் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் சந்திக்கும் உடல்,மன ரீதியான பாதிப்பிளை பாமா விளக்குகிறார். (சங்கதி.ப.43)

**மனைவி மீதான வன்முறை**

திருமணத்திற்குமுன், பெண்களைத் தன் வயப்படுத்திக் கொள்வதில் கவனமாக இருக்கும் ஆண்களின் போலி முகமூடியை உணராத பெண்கள் திருமணத்திற்குப்பின் தொல்லைப்படுகின்றனர். திருமணத்திற்குப்பின் ஆணின் சுயரூபம் வெளிப்படும்போது பெண் அதை எதிர்க்கத் துணிகிறாள். எதிர்த்து நிற்கத் துணியும் பெண்ணைக் கணவன் அடித்துத் துன்புறுத்துகிறான். இது சமூக நடைமுறையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. "பாக்கியராசு கண்டமாணிக்கு பச்ச பச்சயா வஞ்சுக்கிட்டு அடிக்கப்போறான். ராக்கம்மாவும் பதிலுக்குப் பதிலு வஞ்சா. அவெங் கையி மேல படமுன்னே " ஐயயோ எம்மா, எனிய கொல்ரானே சண்டாளப் பெய கட்டைல போறவன், அதக் கரும்பி இதக் கரும்பி, கொள்ளக் கரும்பி, கொழலக் கரும்பி" இப்பிடி கத்திக் கத்தி வஞ்சா.

பாக்கியராசுக்குக் கோவம் இன்ன மட்டுமின்னுல்ல. "அவா பொம்பள கெணக்காவா பேசுரா. தட்டுக்கெட்ட முண்ட. ஓராங்கியெல்லாம் குப்பச்சிப்பட்டியோட வச்சுக்கோ. இங்கு காட்ன ஒற்றே மிதிலே சதம்பிப் போகும் சதம்பி, நாவகம் வச்சுக்கோ, கோவமாக சொல்லிட்டு வந்ததே சரின்னு ராக்கம்மா முடியப் புடுச்சு இழுத்துப் போட்டு அடி வகுத்துல பாத்து ஒரு எத்து எத்திப் போட்டான்". என்று மனைவி மீதான வன்முறையினைப் பாமா பதிவு செய்துள்ளார்.(சங்கதி.ப.66,67)

பெண் மக்களுக்கு உரித்தான வன்முறை நிலையினை, வேறு எந்தவிதமான வார்த்தைகளையும் பயன்படுத்தாது, உள்ளதை உள்ளபடியான நிகழ்வாக, ஆசிரியர் பாமா விளக்கும்போது, வாசகர்களிடம் அது நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆசிரியரும் தான் நினைத்த கருத்தினை வாசகர்களிடம் கொண்டு சேர்க்க முயற்சிப்பதில் வெற்றியும் அடைந்துள்ளதைக் காட்டும் நிகழ்வாக இது அமைந்துள்ளது.

**உடை முறைகள்**

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வதாலும், உயர்சாதியினரின் அடக்கு முறையினாலும், பெண்கள் மேல்சட்டை அணியாத ஒரு நிலையினைக் காண முடிகிறது. பாமா தன்னுடைய பாட்டி வெள்ளையம்மா, சட்டை அணிந்திராத நிலை குறித்துக் கூறும்போது, " பாட்டி சட்ட போட்டும் நான் பார்த்ததில்ல. அவுக காலத்துல கீச்சாதிப் பொம்பளைக சட்ட போடக் கூடாதாம். எங்க பெரீம கூட சட்ட போடல" என்கிறார் பாமா. (சங்கதி.ப.14)

மேல்ச்சாதியினர்களின் ஆதிக்கத்தினால் தலித் இனப் பெண்கள் மேலாடை அணிய அனுமதி மறுக்கப்பட்ட செய்தியை பாமா தன் படைப்பில் குறிப்பிடுகின்;றார்.

**ஆபாச வார்த்தைகள்**

ஆபாசம் என்பது வாழ்வியலோடு இணைந்த ஒன்று. ஆபாசம் என்ற சொல் தீமை அல்லது விலக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ள முடியாத சொற்கள் என்ற பொதுவான கண்ணோட்டம் தலித் வாழ்வியல் குரலில் இல்லை.

ஆபாச வார்த்தைகளைத் தலித் மக்கள் பயன்படுத்தி வருவதும் படைப்புக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சாதாரண பேச்சு வழக்கிலுள்ள சொற்களைப் போன்றே, ஆபாசச் சொற்கள் தலித் மக்களால் பேசப்பட்டு வந்துள்ளது.

சங்கதி நாவலில், வெள்ளையம்மாப் பாட்டியும், பேத்தி மரியம்மாளும்

பேசிக்கொண்டிருக்கும்போது, இடையில் புகுந்த சண்முகக் கிழவி, சண்டையை மூட்டிவிட, வெள்ளையம்மா பாட்டி, சண்முகக் கிழவியைத் திட்ட, பதிலுக்கு சண்முகக் கிழவி ஆபாச வார்த்தைகளோடு கத்த ஆரம்பித்தாள்.

"இப்ப என்னு சொல்லிட்டாக ஒம்பேத்தியாள. இப்பிடி வெறி நாயி கெணக்கா உழுகுற. போங்கடி, தேவிடியாப் பெயமக்கா. ஒங்க வகுச தெரியாதாக்கும். ஊர்ல கேட்டுப் பாரு. நேத்துப் பெறந்த பிள்ளைக்குக்கூட ஒம்பேத்தியாளோட வகுச தெரியும். அவுசாரி போயி புடிபட்டு ஊர்க் கூட்டத்துல கேவலப்பட்டு, கெட்டுப்பட்டு நின்ன சக்களத்திக்குப் பேச்சப்பாரு பேச்ச. தூ... நீயும் நாலுபேரு கெணக்கா பேசுற. ஈனமானமுன்னு இருந்துச்சுன்னா போயி கம்மாயில, கெணத்துல உழுந்து செத்துப்போங்கடி, துப்புக்கழுச்சுட்டு, கத்திக்கிட்டே கம்பையும் எடுத்து ஊனிக்கிட்டுப் போயிட்டா சம்முகக் கெழவி" என்று சண்முகக்கிழவி பேசிய ஆபாச வார்த்தைகளைப் பாமா பதிவு செய்துள்ளார். (சங்கதி.ப.45)

மேற்கூறப்பட்ட இந்நிகழ்வில் இடம்பெறும் ஆபாச வார்த்தைகள், தலித் மக்களின் பேச்சுக்களோடு, ஒன்றாகக் கலந்து வருகின்ற வார்த்தைகளாகவே இடம் பெறுகின்றன. தான் உண்டு, தன் வேலையுண்டு என்றிருப்பவர்களைச் சீண்டிப் பார்ப்பவர்களுக்குக் கிடைக்கும் பதிலடி தான் இத்தகைய ஆபாச வார்த்தைகள். தலித் மக்கள் தங்களுடைய வாழ்வில், மற்றவர்களின் அவமதிப்புகளை நிறைய அனுபவிப்பதால், அவர்களின் பேச்சுக்களில் இத்தகைய ஆபாச வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன

### தொகுப்புரை

பெண்களின் பிரச்சினையை ஒரு பெண்ணாக நின்று, பெண் கண்கொண்டு பார்ப்பதால் மட்டுமே 'புரிதல்' நிலையில் இடர்ப்பாடின்றிச் செல்ல இயலும். அந்த வகையில் படைப்பாளர் பாமா பெண்ணாக இருக்கும் நிலையில், தன் இனப் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் கொடுமைகளையும் பெண்ணியப் பார்வையில் அனுபவ ரீதியாக விளக்குகிறார். அதனால் பாமாவின் பெண்ணியப் படைப்புக்கள் உயிரோட்டமும் உணர்வும் மிக்கதாக விளங்கி, வாசகர்களிடையே உணர்வு ரீதியான பாதிப்பை ஏற்படுத்தி நிற்கிறது. தமிழகத்தில் ஒரு மேல் சாதிப் பெண் அனுபவிக்கும் கொடுமைக்கும் ஒரு தலித் பெண், தான் ஒரு பெண் என்ற அடிப்படையிலும் தான் ஒரு தலித் பெண் என்பதனால் அனுபவிக்கும் கொடுமைக்கும் வேறுபாடுகள் காண முடிகிறது. எனவேதான் ' தலித் பெண்ணியம்' என்று தனியாகத் தோன்றுவதற்கான காரணங்கள் இவ்வியலில் இடம் பெறுகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணிய அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.9.
2. இரா.பிரேமா, பெண்ணியம், ப.13.
3. அரங்க. மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.174.